# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR
## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.125/16 | Village | : | |
| Prosecution witness | : | PW-1 | Taluk | : | |
| Name | : | **திரு. முருகேசன்** | Occupation | : | |
| Father Name | : | திரு. | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 9.9.2025**

A1, A7 abated. Others present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் மெலட்டூர் குச்சிபாளையத்தில் குடியிருக்கிறேன். நான் குச்சிபாளையத்தில் பெட்டி கடை வைத்துள்ளேன். வழக்கில் இறந்துபோனவர் என் தம்பி ஆறுமுகம். 25.5.2014 இல் மாலை 4 1/2 மணியளவில் அகரமான்குடி சித்தர் காட்டை சேர்ந்த சந்தோஷ் மகாதேவன், ஆனந்தன், பிரதீப் ஆகியோர் என் கடை வாசலில் நின்று பால் கேட்டார்கள். கடையில் பால் இல்லை என்று சொன்னேன் என் மகனும் இல்லை என்று சொன்னேன். பால் எனக்கு இல்லை என்று சொல்கிறாயா நான் யார் என்று தெரியுமா என்று சந்தோஷ் சொன்னார் பிறகு மாலை 5 1/2 மணிக்கு சந்தோஷ், மகாதேவன், பாலசுப்ரமணியன், கார்த்திக், பிரதீப், ஆனந்தன், வினோத், சுரேஷ் ஆகியோர் வந்து கடையில் நாங்கள் இருக்கும் போது பக்கத்தில் அண்ணன் அழகர் டீக்கடை வைத்துள்ளார். நான் பால் கேட்டால் கொடுக்கமாட்டாயா நீ பெரிய ஆளா என்று சொல்லி என் தலையில் சந்தோஷ் என்பவர் அரிவாளால் வெட்டினார், அதை தடுக்க வந்த அக்கா மகன் கூத்தரசனை ஆனந்த் என்பவர் அரிவாளால் இடது தோல்பட்டை வலது தோல்பட்டை, இடது கை, வலது கை ஆகிய இடங்களில் வெட்டினார் அதை தடுக்கவந்த தம்பி ஆறுமுகத்தை மகாதேவன் இரும்பு கைபிடியுடன் கூடிய அரிவாளால் தலையில் வெட்டினார். அதை தடுக்க வந்த எனது அழகரை சந்தோஷ், பிரதீப் தலையிலும் நெற்றியிலும் வெட்டினார்கள் கால் விரலில் வெட்டினார்கள். வினோத், சுரேஷ்,

கார்த்திக் ஆகியோர் கட்டையால் மாறிமாறி அழகரை அடித்தார்கள். அங்கு கூட்டம் கூடவே பக்கத்தில் இருந்த கடைகாரர் நாகராஜ், ஜெகதீசன், முருகானந்தம், ரவி, இந்திரன், பிரபு, மதியழகன் ஆகியோர் அங்கு வரவே, சந்தோஷ், மகாதேவன், பிரதீப் ஆகிய மூவரும் அரிவாளை வைத்து கடையில் உள்ள பொருட்களை அடித்து நொறுக்கினார்கள் அதன் மதிப்பு ரூ 5000 இருக்கும். கூட்டம் கூடவே அவர்கள் வந்த வாகனமான Splender ples வினோத், சுரேஷ், சந்தோஷ் ஆகியோர் சென்றார்கள். Excel வண்டியில் மகாதேவன், ஆனந்தன் ஆயுதங்களை கையில் எடுத்துகொண்டு யார் வந்தாலும் வெட்டுவோம் என்று சொல்லி கொண்டு வடக்கு நோக்கி போனார்கள். காயம் பட்ட எங்களை ஜகதீசன் என்பவர் மெலட்டுர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அழைத்து சென்று அங்கு முதலுதவி சிகிச்சை பெற்று 108 ஆம்புலன்சில் தஞ்சை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தோம். மருத்துவர் விசாரிக்கும்போது பதட்டத்தில் 8பேருக்கு பதிலாக 11பேர் என்று சொல்லிவிட்டேன். ஆய்வாளர் வந்து விசாரித்தபோது விஷயத்தை சொன்னேன். 30.5.2014 ஆம் தேதி இரவு 8மணியளவில் எங்களோடு சிகிச்கையில் இருந்த என் தம்பி ஆறுமுகம் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் பார்த்து சொன்னார்கள். மறுபடியும் ஆய்வாளர் விசாரிக்கும் போது விஷயத்தை சொன்னேன். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிஸார் என்னை வந்து விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆயுதங்கள் தான்எதிரிகள் வெட்ட பயன்படுத்தியவை ஆகும் அவை **சா.பொ 1** வரிசை 5அரிவாள்கள், 4 கட்டைகள், தற்போது என்னிடம் காண்பிக்கபடும் புகைபடத்தில் உள்ள Splender Excelவண்டிகள் தான் எதிரிகள் பயன்படுத்தியது **அ.சா.ஆ.1** வரிசை 3 புகைபடங்கள். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

<u>அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணைக்கு அனுமதி கோரியதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

தற்போது என்னிடம் காண்பிக்கபடும் புகார் வாக்குமூலத்தில் 2வது பக்கத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றும் அதை நான் தற்போது ஏதோ காரணத்திற்காக என்னுடையதல்ல என்று மறுத்து சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

மெலட்டுர்மருத்துவமனையும், மெலட்டுர் காவல்நிலையமும் அடுத்த கட்டிடம் என்றால் இல்லை சம்பவ நேரத்தில் அன்னப்பன் பேட்டையில் மெலட்டுர் காவல்நிலையம் இருந்தது. போலிஸார் என்னை முதன்முதலாக எத்தனை மணிக்கு பார்த்தார்கள் என்றால் 8 1/2. அப்போது முதன் முதலான என்ன நடந்தது என்று சொன்னேனா என்றால் ஆமாம். என்னை விசாரித்த போது எதிரிகளின் பெயர் விலாசம் முன்பே தெரிந்து சொன்னேனா என்றால் 2, 3 பெயர் தெரியும் அவர்களை மட்டும் சொன்னேன். 4 1/2 மணிக்கு சந்தோஷ்டன் பால் வாங்க ஆனந்தன், பிரதீப் மகாதேவன் ஆகியோர் வந்தார்கள் என்று இரவு 8 1/2 மணிக்கு போலிஸ் புகார் வாங்க வந்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரிகள் அப்பா பெயர் எங்கு குடியிருக்கிறார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் ஆமாம். கடையில் சம்பவம் 5நிமிடத்திற்குள் முடிந்துவிட்டது என்றால் இல்லை அரைமணிநேரம் இருக்கும். போலிஸ் என்னை விசாரித்தபோது சந்தோஷ் என்னை நீ என்ன பெரிய ஆளா என்று புகார் வாக்குமூலத்தில் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. புகார் வாக்குமூலத்தில் என் தம்பி ஆறுமுகத்தை வெட்டியது மகாதேவன் என்று சொன்னேன் என்றால் ஆமாம். முன்னிலையாகியுள்ள எதிரிகளில் யார்யார் என்று பெயர் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் என்னை அடித்தபோது சிறுபிள்ளைகளாக இருந்தார்கள் தற்போது எல்லாம் வளர்ந்துவிட்டர்கள் அதனால் ஞாபகமில்லை. அவ்வாறு சொல்வது சரியல்லஎன்றால் சரியல்ல. எதிரிகள் இருசக்கர வாகனத்தில் வந்து அடித்துவிட்டு அதே வாகனத்தில் போனார்கள் என்று புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. ஆய்வாளர் விசாரிக்கும்போதுதான் சொன்னேன். புகார் வாக்குமூலத்தில் எதிரிகள் கட்டை வைத்திருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. புகார் படி சந்தோஷ் கடையை அடித்ததாகதான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். புகாரில் யார் குறிப்பிட்டு மிரட்டி போனதாக சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. புகாரில் சொன்ன பெயர் தற்போது சொல்ல தெரியாது என்றால் சந்தோஷ், பிரதீப், மகாதேவன், ஆனந்தன். இரும்பு பிடி வைத்திருந்த அரிவாளால் மகாதேவன் என் தம்பியை வெட்டினார் என்று போலிஸார் விசாரித்தபோது புகார் வாக்குமூலத்திலோ, ஆய்வாளர் விசாரித்தபோதோ அல்லது என் தம்பி இறந்த அன்று விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். புகாரிலோ, முதன்முதலாக போலிஸார்

விசாரித்தபோதோ ஆய்வாளர் விசாரித்தபோதோ சாட்சிகள் ஜகதீசன், முருகானந்தம், மதியழகன், இந்திரன், ரவி ஆகியோருக்கு சம்பவம் தெரியும் என்று சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். நாகராஜ் பெயரையும் சொல்லியுள்ளேன். சாட்சி நாகராஜ் எனது கடைக்கு பக்கத்து கடைகாரர் என்றால் ஆமாம். சம்பவ இடத்தில் நாகராஜ்க்கு கடை இல்லை என்றால் சரியல்ல. நாகராஜ் சொந்த ஊர் கோவர்த்தகுடி என்றால் ஆமாம். அவர் எங்கள் ஊரில் வெல்டிங்கடை, எலக்ட்டிரிக்கல் கடை 20 ஆண்டுகளாக வைத்துள்ளார். சம்பவ இடத்தின் அருகே நாகராஜ் எலக்ட்ரிக் கடை இல்லை என்றால் சரியல்ல. நாகராஜ் என் நண்பர் என்றால் ஆமாம். சம்பவம் நடந்தரோடு வடக்கு தெற்கு ரோடு என்றால் ஆமாம். அதில் என் கடை மற்றும் சின்னையன் டீக்கடை, நாகலிங்கம் கடை, சுகுணா சிக்கன் கடை, விநாயகர் சைக்கிள் கடை ஆகியவை உள்ளது என்றால் ஆமாம். நாகராஜ்க்கு விநாயகர் சைக்கிள் கடை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புகாரிலோ, போலிஸார் விசாரிக்கும்போதோ கார்த்திக் என்ற எதிரி என் சகோதரதை கட்டையால் அடித்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புகார் இரண்டு முறை போலிஸார் முதலிலும், என் தம்பி இறந்தபோது சம்பவ இடத்தில் கார்த்திக் இருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவத்திற்கு பிறகு சான்று பொருட்களை இன்று தான் பார்க்கிறேன் என்றால் ஆமாம். என் மனைவி, ஜகதீசன் இருவரும் பேருராட்சி நகர்மன்ற உறுப்பினர் என்றால் ஆமாம். பதவியில் இருந்தபோது அதிமுக கட்சி என்றால் ஆமாம். அத்துவனபட்டி கிராமம் எங்கள் ஊரிலிருந்து 2கி.மீ தள்ளி உள்ளது என்றால் ஆமாம். கந்தவனம் கிராமம் எங்கள் ஊரிலிருந்து 7கி.மீ தள்ளி உள்ளது என்றால் ஆமாம். கோவர்த்தகுடி கிராமம் 7கி.மீ தெற்கே உள்ளது என்றால் 4 கி.மீ. ஏர்வாடி கிராமம் கிழக்கும் பக்கம் 3 கி.மீ என்றால் ஆமாம். சாட்சி ராமமூர்த்தி, ரெங்கசாமி என் கட்சியை சேர்ந்த நண்பர்கள் என்றால் ஆமாம். சாட்சி பத்மநாபன், பழனிவேல் எங்கள் கட்சியை சேர்ந்தவர்கள் நண்பர்கள் என்றால் ஆமாம். சாட்சி தாமோதரன், ராஜசேகர் இருவரும் கட்சியை சேர்ந்தவர்கள் என்றால் தெரியாது. முருகானந்தம், மதியழகன், இந்திரன், ரவி ஆகியோர் என் நண்பர்கள் என்றால் ஆமாம். போலிஸில் புகார் கொடுக்கும்போது கடைக்குள் வந்து பொருட்களை சேத படுத்தியதையும் என்னை வெட்டியதையும் சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவ நேரத்தில் என் மைத்துனர் கூத்தரசன் மது அருந்தியிருந்தார் என்றால் டீக்கடையில் டீபோட்டு கொண்டிருந்தார். அவர் சம்பவ காலத்தில் குடி போதையில் இருந்தார் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முன்பாக மாங்குடிகாரர்களுக்கும் சித்தர் காடு காரர்களுக்கும் ஜகதீசனுக்கு தேர்தல் தொடர்பாக விரோதம் இருந்தது என்றால் தெரியாது. வழக்கில் சம்பவதன்று இரவு போலிஸார் விசாரித்து வாக்குமூலம் வாங்கியதாக சொல்வது பொய்

என்றால் சரியல்ல. ஜகதீசன் ஆலோசனையின் அடிப்படையில் 26.5.2014 மதியம் 1மணிக்குமேல் எதிரிகள் பெயர் காவல்நிலையத்தில் சொல்லபட்டது என்றால் சரியல்ல. சம்பவத்தில் ஈடுபட்ட பெயர் சொல்லபட்ட நபர்களை தவிர மற்ற நான்கு நபர்களின் பெயர், வயது அங்க அடையாளம் போலிஸாரிடம் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. சம்பவத்திற்கு பிறகு எதிரிகளை இன்றுதான் பார்க்கிறேனா என்றால் ஆமாம். சித்தர்காடு கிராமம் குச்சிபாளையத்திலிருந்து வடக்கும் பக்கம் 4கி.மீ தள்ளி உள்ளது என்றால் 5, 6 கி.மீ இருக்கும். மாங்குடி கிராமம் வடக்கு பக்கம் சுமார் 4 கி.மீ என்றால் ஆமாம். அகரமான்குடியில் கடைத்தெரு என்றால் ஆமாம். 1 , 2, 3 எதிரிகளுக்கும் இறந்துபோன சந்தோஷ் என்பவருக்கும், ஜகதீசனுக்கும் உள்ள முன்விரோதத்தின் காரணமாக இந்த வழக்கு புகார் பொய்யாக தயார் செய்யபட்டது என்றால் சரியல்ல. மற்ற எதிரிகளும் ஜகதீசன் சொல்லிதான் இந்த வழக்கில் சேர்க்கபட்டார்கள் என்றால் சரியல்ல. சந்தோஷ் இறந்துபோனவர் எங்கள் ஊரில் குடியிருந்தார் என்றால் ஆமாம். அதனால் அவரை நன்றாக தெரியும் என்றால் தெரியும். மெலட்டுர் மருத்துவமனையில் மருத்துவரிடம் நடந்ததை சொன்னேனா என்றால் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சொன்னேன். மெலட்டுர் மருத்துவமனை 35 ஆண்டுகளாக உள்ளது என்றால் ஆமாம். மெலட்டுர் மருத்துவமனையில் இருந்தபோது போலிஸார் அங்கு வந்துவிட்டார்கள் என்றால் இல்லை. நான் முதல்விசாரணையில் சொன்னது மாதிரி எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், நான் சொன்ன எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், சொன்னால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப .நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.